
Kavignan

# கவிஞன்

முற்றுமுழுதான மாதாந்தக் கவிதைச் சஞ்சிகை

**இனி நீங்களும் விளையாடலாம் மொழியோடு**



**இதழ்-008 ஐப்பசித் திங்கள் 2010**

விலை ரூபா-20.00

# Kavignan கவி ஞன்

கவிஞன் வாசகர்களுக்கு வணக்கம்,

**வாசித்து வையகத்தை வெல்வோம்.**

ஐப்பசி என்றாலே ஞாபகம் வருவதில் ஒன்று தேசிய வாசிப்பு மாதம். 'வாசிப்பதால் மனிதன் பூரணமாகிறான்' என்றால் ஒரு வாசகனைப் பூரமாக்கும் பொறுப்பு ஒரு எழுத்தாளனுக்குகே கொடுக்கப்பட்டிருக்கின்றது. எனவே ஒரு எழுத்தாளனின் படைப்புக்கள் அனைத்தும் வாசகரைப் பூரணப்படுத்தும் நோக்கிலேயே அமையவேண்டும் என்பது கட்டாயமாகிறது. கவிதைகளும் கூட அவ்வாறே.

சில கவிஞர்கள் தங்களைக் காலத்தின் கண்ணாடி என்கிறார்களே தவிர, தங்களை அந்தக் கண்ணாடியில் ஒருபோதும் முகம் பார்ப்பதில்லை. இதனால் தன்னுள் செய்யவேண்டிய பல திருத்தங்களை செய்யாமலே செயலிழந்து விடுகிறார்கள்.

இதை நிவர்த்தி செய்யவும் வளர்ந்துவரும் கவிஞர்களைப் புடம்போடவும் இன்றைய கவிஞன் வெளியீட்டுடன் கவிதைப்பட்டறை ஆரம்பமாகிறது. தொடர்ந்தும் இவை நிகழ உங்கள் ஆதரவும் இறைவன் அருளும் வேண்டி அடுத்த இதழில் சந்திக்கும்வரை விடைபெறுகிறேன்.

~நன்றி~

அன்புடன்
ஆசிரியர்

"கவிஞன்"
கூட்டுறவுக்கடை வீதி,
புதுக்குடியிருப்பு-5(கீ.மா),
மட்டக்களப்பு,
இலங்கை.

'KAVIGNAN"
Co-op Road,
Puthukkudiyiruppu - 5 (E.P),
Batticaloa,
Sri Lanka.

மின்னஞ்சல்: kavignan@live.com

**வருடச் சந்தா ரூபா.300.00**

சந்தா தொகையினைக் காசுக்கட்டளை மூலமாக அனுப்பமுடியும்.

அனுப்பவேண்டிய தபாலகம் : புதுக்குடியிருப்பு

முகவரி : ச.மதன், கூட்டுறவுக் கடைவீதி, புதுக்குடியிருப்பு(கீ.மா),மட்டக்களப்பு.

Kavignan
# கவி ஞன்

தோற்றம்: 27. பங்குனி. 2010

08

22 ஐப்பசி 2010

ஆசிரியர் :சதாசிவம் மதன்
தொ.பே :0094 773620328
முகவரி :கூட்டுறவுக்கடை வீதி,
புதுக்குடியிருப்பு-5(கி.மா),
மட்டக்களப்பு,
இலங்கை.
மின்னஞ்சல்: kavignan@live.com

## உள்ளே....

அறிமுகப் புதுமுகம்................ 03
இம்மாதப் பிரபலம்................ 04
இலக்கணக் கவிஞன்........... 06
கவிதைத்துளிகள்................ 07
கவிதைச் சமர்..................... 08
மாதம் ஒரு கீதம்..................... 09
நவராத்திரி நாயகியே............ 10
ஒக்டோபர் ஆறு..........................11
இசைதேடும் கவிதை............... 12
தொலைந்த அந்த நாட்கள்........ 13
அட்டைப்படக் கவிதை.............14
அகத்தில் அமர்ந்தவை ............ 15
மேசைக்கிறுக்கல் ....................16
நிறைமகள் ..........................17
வாசகரிடமிருந்து கவிஞனுக்கு.....18

## சிந்தனைக்கு...

**கவிஞன் தான் பெற்ற உணர்வின் ஸ்பரிசத்தை வாசகருக்கு புரியும் படி செய்வதே கவிதையின் உயிரித்துவம்.**

-கவிமணி நீலாபாலன் (கல்முனைப்பூபால்)-

# அறிமுகப் புதுமுகம்



*முழுப்பெயர்* :செல்லப்பா சுரேன்.

*முகவரி* : 10 A, குடியிருப்புமுனை.
நாவிதன்வெளி,
கல்முனை.

***பிறந்த திகதி:*** ஒக்டோபர் 10

***கல்வி கற்ற பாடசாலை:***

கமு/உவெஸ்லி உயர்தரப் பாடசாலை.

***எழுத முயல்வது :***
வாழ்க்கையின் அவலங்களை வார்த்தையின் அகலம்வரை..

***படிக்க விரும்புவது :*** நல்ல கவிதைகள்

***பிடித்த கவிஞர் :*** கவிஞர்.நிலாவாணன்

***சொல்ல நினைப்பது :***
அவரவர் வலிமை அவருக்கே தெரியும்

***படித்ததில் பிடித்தது:***

தவறே செய்யாதவர்கள் கட்டாயம் எந்த விதமான புதுமையும் கண்டு பிடிக்காதவர்களாகத்தான் இருப்பார்கள்.
(சாமுவேல் ஸ்மைல்ஸ்)

## அந்தரங்கச் சமாச்சாரம்

படுக்கை விரியுடன்
பரிதவிக்கும் தொனியுடன்
கக்கத்தில் சிறுபிள்ளை
பக்கத்தில் யாரும் இல்லை
ஒருபுக்கம் கையும் இல்லை
வந்திருந்தாள் பெண்ணொருத்தி
நிழல் உள்ள மரம் தேடி

பார்ப்பதற்கும் கேட்பதற்கும்
துணையாக யாருமில்லை
பொட்டில்லை பூவில்லை
கழுத்தில் தாலியும் இல்லை

என்னம்மா என்ற போது
சொல்லுகிறாள் ஓலத்துடன்...

நான் ஓர் அனாதை
காசில்லை பணமில்லை
எனக்கென சொந்தமில்லை
வயிற்றுப் பிளைப்பிற்காய்
வகைவகையாய் இடங்கள் சென்றேன்
தெரியாத ஊர் ஒன்றில்
தெருவோரம் நின்றிருந்தேன்
தெருவிளக்கும் அணையவில்லை
புதிதாய் வேலை செய்ய
புதுமொழியும் புரியவில்லை

*தொடர்ச்சி பக்கம் 13 இல்*

**அறிமுகப் புதுமுகத்தில் அறிமுகமாக விரும்புவோர் தங்களது ஆக்கங்களுடன் அண்மையில் எடுத்த புகைப்படமொன்றை தபால்மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கலாம்**

# இம்மாதப் பிரபலம்



## "கவிஞர் முல்லை வீரக்குட்டி"

முழுப் பெயர் :திரு.K.வீரக்குட்டி
பிறந்த இடம் : தம்பிலுவில்
பிறந்த திகதி : 23.03.1949
கல்வி கற்ற பாடசாலை: தம்பிலுவில் மகாவித்தியாலயம், கல்முனை பாத்திமா கல்லூரி.

1968 இல் க.பொ.த.சாதாரணதரம் படித்துக்கொண்டிருக்கும் காலத்திலேயே கவிதையுலகில் பிரவேசித்த இவரின் கவிதைகளுக்கு சிந்தாமணி, வாரமஞ்சரி,தினபதி,கவிதா மண்டலம் போன்ற பத்திரிகைகள் களமமைத்துக் கொடுத்தன.

கவிதையின் இலக்கணத்தை கவிவேந்தன் நீலாவாணனிடமும்,கவிஞர் பாண்டியூரனிடமும் சுத்தமாகக் கற்றுக்கொண்ட இவர் கவிதையோடு மட்டுமல்லாமல் அனேகமான சிறுகதைகளும் , கட்டுரைகளும் எழுதியுள்ளார்.
இவரின் கவிதைப் படைப்புகள் பல தினபதி, சிந்தாமணி, வீரகேசரி, தினகரன், கலசம்,செய்தி, மாணிக்கம், புதுயுகம், குமரன், மல்லிகை, ஜனவேகம், தினக்கதிர், தினக்குரல், சுடர்ஒளி, நவமணி,முதலான முன்னணி ஏடுகளில் வெளியானது மட்டுமல்லாது, வானொலி மஞ்சரி போன்ற வானொலி நிகழ்ச்சிகளிலும் ஒலிபரப்பாகியிருந்தன.

கல்முனை புதிய பறவைகள் கவிதாமண்டல அமைப்பாளருள் ஒருவரான இவர் , 1974 இல் திருமலையில் புதிய ஜனநாயக எழுத்தாளர் கலை இலக்கிய மாநாடு நடத்தவும் காரணமாயிருந்தார்.
இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கொழும்பு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்திய கலை இலக்கிய மாநாட்டில் கவிதை படிக்கவும விமர்சிக்கவும் அழைக்கப்பட்டு பாராட்டப்பட்டுள்ளார்.

"இன்னும் விடியவில்லை" எனும் கவிதைத் தொகுதியை தம்பிலுவில் ஜெகா மற்றும் குறுஞ்சி வாணன் போன்றோருடன் சேர்ந்து வெளியிட்டார்.
இவரின் கவிதைத் திறமையைப் பாராட்டி திருக்கோயில் பிரதேச செயலகம் 1996 இல் சாகித்திய விழாவில் பொன்னாடை போர்த்தின் கௌரவித்தது. கடந்த மாதம் கிழக்கு மாகாணமட்டக் கவிதைப்போட்டியில் பங்குபற்றி இவரின் கவிதை முதலிடத்தைத் தனதாக்கிக் கொண்டது.

தான் எழுதிய கவிதைகளில் தனக்குப் பிடித்த கவிதையாக கவிஞன் வாசகர்களுக்காக "தாரகைப் பூக்கள்" எனும் கவிதையைத் தருகிறார்.

இவர் இன்னும் பல விருதுகள் பெற கவிஞனின் வாழ்த்துக்கள்......

# தாரகைப் பூக்கள்

கவிஞர்.முல்லை வீரக்குட்டி

வானப் பூங்காவின் இரவுச் சுகந்தம்...,
மலர்ந்தே மறையும் வண்ணத்துப் பூக்கள்...!

தங்காமல் ஓடிடும் வானத்துப் படகு...,
மஞ்சள் பூசியே மின்னிடும் சந்திரன்...!

உங்கள் மலர்வின் இனிய சௌந்தர்யம்...,
ஒளிரும் பருதியின் மறைவுத் துயரம்...!

நீங்கள் வழங்கிடும் நித்திலக் காட்சிகள்...,
நித்தியம் இழந்த நினைவுத் தூபிகள்...!

பருத்திக் காவில் பஞ்சுக் குவியல்கள்...,
ககனத்தில் மேய்ந்திடும் வெண்ணிற மந்தைகள்...!

சேர்ந்தே விரைந்திடும் தாரகை நீங்களோ...,
சமுத்திர விசும்பின் பொன்நிற மலர்கள்...!

நீலாம்பரி இசை தவழ்கின்ற வேளை...,
நீங்கள் வானை அலங்கரித்திடுகிறீர்..!

நீண்ட இரவின் மௌன சுகந்தான்...,
நீங்கள் வழங்கிடும் மோகன இரவுகள்...!

வைகறைப் புலர்வின் பூபாள ராகமே...,
தாரகைப் பூக்களும் உதிர்வின் சங்கொலி...!

# இலக்கணக் கவிஞன்

ஒரு கவிஞன் தன் மொழிவளம் பெருக்கிக்கொள்வது அவனது கவிதைகளின் விலாசத்தை விசாலப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. அந்தவகையில் தமிழ் இலக்கண நூல்களில் ஒன்றான பவணந்தி முனிவர் இயற்றிய "நன்னூல்" விளக்கவுரையுடன் இவ் இலக்கணக் கவிஞன் பகுதியினூடாக வாசகர்களுக்காக தரப்படுகின்றது.

## பிறப்பு

**சூத்திரம் 76**

**அவற்றுள்.**
**முயற்சியுள் அ ஆ வங்காப் புடைய**

அவற்றுள் ஆமலிடம் வகுக்கப்பட்ட முதலெழுத்துக்களுள் அ, ஆ ஆகிய இரண்டு எழுத்துக்களும் நால்வகை முயற்சியுள் அண்ணத்தின் தொழிலாகிய வாயைத் திறக்கையில் பிறக்கும்.

**சூத்திரம் 77**

**இ ஈ எ ஏ ஐ அங்காப்போ**
**டண்பன் முதனா விளிம்புற வருமே.**

இ, ஈ, எ, ஏ , ஐ ஆகிய ஐந்தும் மேல்வாய்ப்பல்லை நாக்கடியினது ஓரமானது பொருந்தப் பிறக்கும்

**சூத்திரம் 78**

**உ ஊ ஒ ஓ ஔவிதழ் குவிவே.**
உ, ஊ, ஒ, ஓ, ஔ, ஆகிய ஐந்து எழுத்துக்களும் உதடுகள் குவிதலால் பிறக்கும்




## கரைந்தோடிய குழந்தை

கண்கள் இமைத்தபோது
ஊரே இருண்டது மழை
பெய்யவென நினைத்தேன்
பெய்தது குண்டு மழை
கையில் இருந்த குழந்தையைக்
காணவில்லை
சேலையைப் பிடித்த
பிள்ளையையும் காணவில்லை
என் ரத்தத்தால்
நனைக்கப்பட்டபோது
உணர்ந்தேன்
குழந்தையும் பிள்ளையும்
குண்டு மழையில்
கரைந்தோடி விட்டதை

**செல்வி.லோ. நிறோஜினி**
**சின்னக் குளம்**
**அக்கரைப்பற்று.**

## நட்பு

உருவைப் பார்த்து
நட்பு வைக்காதே–அது
கண்ணாடிபோல் உடைந்து விடும்
அழகைப் பார்த்து
நட்பு வைக்காதே–அது
ரோஜா முள்போல் குற்றிவிடும்
உள்ளத்தைப் பார்த்து நட்பு வை
அது
தண்ணீர் போல் தாகம் தீர்க்கும்

**தரம் 10**
**கு.நிலோ**
**மத்பிலுவில் மகா**
**வித்தியாலயம்**

அன்பான வாசகர்களே,
"கவிஞன்" இதழின் வளர்ச்சிக்கும் தொடர்ச்சிக்கும் உங்களது ஆதரவை எதிர்பார்க்கின்றோம். நீங்களும் இன்றே சந்தாதாரராவதோடு உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

-நன்றி-




## "வார்த்தைகள் உரசும்போது
## வண்ணக் கவி உருவாகும்"

# அர்த்தமுள்ளது மரபு

மரபுக் கவி . அறிவு நெறிப் பாக்களாய் வருவதால்
மறதிகளை வென்று நிலைக்கும்.
மறுபடியும்... மறுபடியும்... அறிவுறுத்தி எம்வாழ்வை
சரிவழியிற் தொடரப் பணிக்கும்.
புதுக்கவிதை நினைவுகளிற் பதிவதில்லை. அதனை எங்கள்
இளையவர்கள் அறிய வேண்டும்.
புதுக்கவிதை என்கின்ற பொம்மைகளை விட. பழைய
மரபுக்கவி அர்த்தமுள்ளதே.

விளக்கமில்லாக் கவிதைகளைக் கட்டவிழ்த்துத் தெழிவுபெற
வித்தைகள் நாம் கற்க வில்லையே.
விதைக்கப்படும் வார்த்தைகளும் பாவனையி லில்லாத
புதுப்புதிய இறக்குமதிகள்.
கலையென்ப தென்ன? மொழிக் கலாசாரம் கொதுப்பிய
வழிகாட்டி... அதனைச் சிதைத்து
புதிதென்னும் பேரிலே மொழிநாக ரீகத்தைப்
புதைப்பதோ... புதிய வரவு

கவிதையே புதுமைதான். அதனை ஏன் புரியாத
அவியலாத் தருகின்றார்கள்?
கற்றலே இல்லாத "சொற்கறிக் கூட்டினால்"
வெற்றிகள் பூப்பதில்லையே
அற்புதமானதாய்... அமாழிஅழ குள்ளதாய்....
அறிவியற் செறிவுள்ளதாய்...
ஆக்கனும் கவிதையை. ஊத்தைகள் அனைத்தையும்
அப்புறப்படுத்திவிட்டே.

மொழிதலில் அழகில்லை... பொருளிலும் சிறப்பில்லை...
உயிரில்லா முண்டங்களை
கவிதையாய் உருவாக்கி பெயர்தேடும் கவிக்காரர்
பெருக்கத்தாற் பயன் என்ன சொல்?
செறிவான கருத்தோடு மனிதத்தை உயிர்ப்பித்து
திசைகாட்டும் வழிகாட்டியாய்
செய்யட்டும் கவி நூறு மரபிலே.... அதுதானே
சிரஞ்சீவி.... புரிந்து கொள்வீர்.

***-கவிவலன்-***

*சிறந்த கவிதைகள்*

**மரபுக் கவிதையா? புதுக்கவிதையதா?**

*என்று உங்கள் கருத்துக்களை கவிதையாக்கி அனுப்புங்கள்*

# மாதமொரு கீதம்

**இம்மாதக்கீதம்**
தி/சேனையூர் மத்திய கல்லூரி

**இயற்றியவர்**
திருமதி.இரத்தினராஜா

சேனையூர் மத்திய கல்லூரி
தெளிவு அறிவு உறுதி
செந்நெல் தேன்பால் கொழிக்கும் நல்லூரில்
சேனையூர் மத்திய கல்லூரி.

உண்மை உழைப்பு உயர்வு
ஊக்கம் நேர்மை கொள்மின்
கல்வியில் தேர்ச்சி கல்கலைக் கழகம்
நாடு சேவை வீரம் வெற்றி
சேனையூர் மத்திய கல்லூரி

நன்நூல் தீபம் உயர்ந்த லட்சியம்
அன்பு ஒற்றுமை வாழும் வழிகள்
கலை விஞ்ஞானம் கைத்தொழில் கல்வி
ஆங்கிலம் வர்த்தகம் அழகியல் கலைகள்
சேனையூர் மத்தின கல்லூரி

காட்டும் நல்வழித் தேட்டம் உள்ளம்
ஊட்டும் மகிழ்ச்சி உந்தும் என்றும்
பக்தி பணிவுமிகு ஏழும்
ஒரு பகலவன் நிகராகும்.

---

**மதிற்பிற்குரிய அதிபர்களே! ஆசிரியர்களே!**

இப்பகுதியில் உங்கள் பாடசாலையின் கீதமும் இடம்பெற விரும்பினால். உங்கள் பாடசாலை கீதத்துடன் அதை இயற்றியவர் பற்றிய சிறு விபரத்தையும். உங்கள் பாடசாலையின் மாணவரிடமிருந்து பெற்ற ஆக்கங்களையும் அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எமக்கு அனுப்பிவையுங்கள். இதன்மூலம் கவிஞனின் கலாசாலைக்கீதங்கள் தொகுக்கும் மற்றும் ஆவணப்படுத்தும் செயற்றிட்டத்தில் நீங்களும் இணைந்து கொள்ளலாம்.

-நன்றி-



# நாமகளே!

நாவின் நாயகியாம்
நாமகளே உன் புகழை
நாவார நான் பாட –என்
நாவில் வந்தமர்வாய் நாமகளே!

அழிவில்லாக் கல்வியை
அகிலத்தில் நான் பெற்றிட
கல்விக்கரசியாம் கலைவாணியே
கருத்தில் வந்தமர்வாய் நாமகளே!

தஞ்சமம்மா தாயே யென்றால்
பஞ்சமின்றி அருள் கொடுப்பாய்
கெஞ்சுகின்றேனம்மா என்
நெஞ்சில் வந்தமர்வாய் நாமகளே!

நவராத்திரி காலமதில்
நவசக்தி நாயகியாம் – உன் புகழை
நாவாலே நான் பாட –என்
நாவில் வந்தமர்வாய் நாமகளே!

திருமதி.லோகேஸ்வரி கிருஸ்ணமூர்த்தி
நெசவு நிலைய வீதி
அக்கரைப்பற்று-07

# ஒக்டோபர்–06

ஈடு இணை அற்றதொரு தெய்வம்
இத்தரையில் நடமாடக் கண்டீர்
நாடு நலன் பெற்றிடவே செய்யும்
நல் ஆசானின் புகழ் மண்ணில் வாழ்க!

போற்றிடவே மொழியொன்றுமில்லை
பறை சாற்றிடத் தேவையினியில்லை
கற்றறிவால் வையகத்தை வாழவைக்கும்
கல்விமான் ஆசானின் புகழ்வாழ்க!

கண்ணற்ற வாழ்வினையே மாற்றியவர்
கண்கண்ட கடவுளரே கலியுகத்தில்
மண்பெற்ற மாமனிதர் ஆசானே!
மகிமைமிகு மனிதமது வாழ்கவே!

சிறப்பெய்து இப்புவியில் வாழ்ந்திடவே
சிந்தனையோடறிவு வேண்டுமெ
பிறந்த நல் பயனான கல்வியை
பெற்றிடத் தந்நவர் வாழ்கவே!

ஒக்டோபர் ஆறெனும் தேதியிலே
ஓங்குதே ஆசானின் புகழெங்கும்
ஒவ்வொரு நாளிலும் பேசனும்
ஒளியேற்றிய ஆசானின் புகழினை.

பாடு உளத் தூய்மையுடன் பாடு
பாரினிலே அவர்போல யாரு
நாடு அவர் பாதங்களை நாடு
நலமான வாழ்வினையே தேடு!

--கதிரவன்--

# இசைதேடும் கவிதை

உருகி உருகி வழிந்து
மீண்டும் இருகிப்போகிறேன்...
வானவில்லாய் வளைந்து
தேடி
கலைந்துபோகிறேன்...
அழிந்துபோகும்... தெரிந்தும்
கரையில் எழுதிவைக்கிறேன்..
கனவே... உனைக்கானவே
தினம் நான் கனவு
காண்கிறேன்....
(உருகி உருகி வழிந்து....)
தேகம் உன்னால் எரியும்
நான் விறகாய் சாகிறேன்...
நீ களவுகொண்டு போக
வெறும் கூடாய் நோகிறேன்...
வெயில் கொதிக்கும்போதும்
நான் பனியில் உறைகிறேன்..
என் தனிமை தவிக்கும் நேரம்
மழையில் கனலாய்
வெடிக்கிறேன்...
உயிரை தீண்டி.... உணர்வை
கொழுத்தி
ஒழிந்துகொள்கிறாய்..
நான் உடைவேன் என்று
தெரிந்தும்
விழியால்
மோதிச்செல்கிறாய்...
வரமாய் ஒரு சொல் தருவாய்
நான் வேண்டிநிற்கிறேன்....
சாபமேனும் தந்துசெல்லேன்
என் உயிர பிழைத்திடுவேன்...

நினைவுச்சுவற்றில் உன் பெயர்
மட்டும் எழுதி வைக்கிறேன்...
உன் சிரிப்பின் இசைக்கு
வரிகள்கோர்த்து
பாடிப்பார்க்கிறேன்...
நீபோகும் சாலையில்
நானும் நடந்து
சிலிர்த்துப்போகிறேன்..
உன்னை கடக்கும் நொடியில்
நூறுமுறை தினம்
செத்துப்பிழைக்கிறேன்...
நரம்பில்புகுந்து...
சுயத்தைபிழிந்து...
என்னில் கலகம் செய்கிறாய்...
அடிமை சாசனம்
எழுதித்தந்தும்
வம்பாய்...
போர்தொடுக்கின்றாய்...
என் காதல் ஒருநாள்
உணர்வாய்
என்றே காத்திருக்கின்றேன்...
இல்லை...
என்கல்லறைமீதெனிலும்
கண்ணீர்விடு.. நான்
மோட்சமடைந்திடுவேன்....

**கயிலைநாதன் ஜெயகணேஸ்**
**திருக்கடலூர்**
**திருகோணமலை**

*3 ம் பக்க அறிமுகப் புதுமுகம்*

செல்லப்பா சுரேன் *அவர்களின்*

*கவிதையின் தொடர்ச்சி.........*

கிடைக்கும் வேலை எதுவெனினும்
சிறப்பாய் செய்வோம் என்று
தலை நிமிர்ந்து பார்க்கிறேன்.
கை எட்டும் தூரத்தில்
கட்டையாய் ஒருத்தன்.

கைபிடித்து என்னை
கடைசிவரைக் காப்பாற்றுவேன்

தொலைதூரம் போக வேண்டாம்
தொழில் எதுவும் செய்ய வேண்டாம்
தோழியாய் நீயிருந்து
பத்துப் பிள்ளை பெற்றுக்கொடு

தோட்டமுண்டு துறவுண்டு
தொலைநகலுடன் கடையுமுண்டு
முதலாளியாய் நீயிருந்து
முழுக்கணக்கும் நீபாரு

வாய்த்தது வாழ்க்கை என்று
இரண்டு நாள் கழித்து
3ம் நாள் கூறுகிறான்.....
களவாடிப் பெண் நீயென்று
உள்ள பொய் அத்தனையும்
ஊரார்க்கு எடுத்துரைத்து
ஒற்றைக் கை வெட்டி என்னை
நடுத்தெருவில் தள்ளி விட்டான்

பணத்துக்காய் ஆசைப்பட்டு
முந்தானையும் விரித்து விட்டேன்
வாரி அணைத்துவிட்டான்
என் கற்பையும் சேர்த்து அன்று

# தொலைந்த அந்த நாட்கள்

பட்டி தொட்டியெங்கும்
பாட்டி கதைகேட்க
வட்ட நிலா முற்றமெலாம்
சுற்றிவந்த
முன்னோர் காலமது

கற்றவரும் உற்றவரும்
மற்றவரும் கூடி நிதம்
வெட்ட வெளி தேடி அதில்
வட்டமிட்ட காலமது

நட்ட பயிர் பட்டவுடன்
தொட்டணைத்து முத்தமிட்ட
கட்டழிந்து போன எங்கள்
கட்டழகுக் காலமது

நட்டநடு நிசியில்
பட்டப் பகலெனவே
சுற்றிவந்த எங்கள்
தொடராய்த் தொலைகின்ற
தொலைவான காலமது.

**கவிஞன்**

# அட்டைப்படக் கவிதை

சிங்கத்தோல் போர்த்திய
பூனையொன்று
எதிர்காலம் புரியாமல்
சிரிக்கு தின்று!

மகேந்திரவர்மன்
செட்டிபாளையம்

மனம் காட்டும் கண்ணாடி
தினம் வேண்டும் - என்
முன்னாடி- என்று
வரம்கேட்டால் பின்னாடி
வருத்தப்படனும் நண்பா நீ!

றி.தனுஜலான்
காங்கயனோடை வீதி
ஆரையம்பதி


பூனையும் சிலநேரம்
சிங்கமாய் தோன்றலாம்
மனித வேடங்கள் பல நேரம்
வெள்ளையாய் போகலாம்!

கே.விஜயராஜ்
திருகோணமலை

எதிர்காலக் கூர்ப்பை இப்போ
படம்பிடிக்கிறதோ?
இல்லை
இறந்த கால
இனிமையெண்ணி
மனம் பதைக்கிறதோ?

தனுகோபன்
யாட் வீதி
கல்முனை

---



அடுத்த மாதம் அட்டைப்படமாகவுள்ள இப் படத்தைப் பிரதிபலிக்கும் உங்கள் எண்ணங்களை கவிதையாக்கி எமக்கு எழுதியனுப்புங்கள்

# அகத்தில் அமர்ந்தவை

**கவிதைத் தொகுதி : "இரண்டு கார்த்திகைப் பறவைகள்"**
**ஆசிரியர் : திரு.எஸ்.புஸ்பானந்தம்**
**இரசித்தவர் : ச.லவன்**

"இன்னுமொரு தரம்...." இது உண்மையாகவே படிப்பவரை இன்னுமொரு தரம் படிக்கவைக்கும் கவிதையெனலாம். இது மீன்பிடித்து அன்றாட வாழ்க்கை நடத்துபவனின் பயத்தினைக் காட்டுவதுடன் தேர்தல் காலத்தில் அவனின் குடும்பத்தில் ஏற்படும் நிகழ்வினையும் எடுத்துக்காட்டுவதாகவே கவிஞர் இக் கவிதையை வடித்துள்ளார்.இது அவன் ஒருவனின் வாழ்க்கையல்ல. இது போன்ற மீன்பிடித் தொழில் செய்பவர்களின் ஒட்டுமொத்த வாழ்க்கை என்றே கூறலாம். எனினும் "விதிவிலக்கில்லாத விதியும் இல்லை" எனும் ஏதோ ஒரு கவிஞனின் வரிகளுக்கேற்ப ஒரு சிலர் இப்படி இல்லாமலும் இருக்கலாம். கவிஞர் இக் கவிதையை பொதுப்படையாக மிகச் சிறப்பாகப் படைத்துள்ளார்.

"விழி பிதுங்கி வெளிக்கிடும் தோணி...." .

"காற்றுக் கரங்கள்
தோணியைத் தொட்டிலாய் ஆட்ட"

போன்ற வரிகள் சிறப்பான அணிகளுடன் கவிதைக்கு சிறப்பூட்டுகின்றன என்பதில் ஐயமில்லை.

".......... மாலைக்குப் பூப்பறிக்க
பிள்ளைகளை வெருட்டுவோம்..."

மிகச் சிறப்பாக ஜதார்த்தமாக மண்வாசனையுடன் சொல்லியிருப்பது கவிஞனின் ஆளுமைக்கு அணிசேர்க்கிறது.

தேர்தல் காலத்தில் வருகின்ற பிரமுகர்கள் சொன்னதையே திரும்பத்திரும்பச் சொல்வார்கள். என்பதையும் சிறப்பாகத் தனது கவிவரியூடு காட்டியுள்ளார்.

அத்துடன் மீனவனின் பயமும் " இன்னுமொரு தரம்" என்று தொடர்ந்து கொண்டு போகும் கவிதையின் தலைப்பு சிறு மயக்கத்தைக் கொடுத்தாலும் கவிதைக்கு ஏற்ப பொருத்தமாகவே உள்ளது.

# மேசைக் கிறுக்கல்



ஒருதலைக் காதல்
உண்மை ரணங்கள்
மெதுவாகக் கொல்லும்
மௌன விஷமாய்
மரணம் வரைக்கும்.

உன்னுள் என்னைத் தேடினேன்
தோற்றுப் போனேன் - காரணம்
என்னுள் அல்லவா நீ
தொலைந்து விட்டாய்

அமைதியாயிருந்த
என் நெஞ்சை
ஆர்ப்பாட்டம் செய்த உன்னை
மறுபடியும் காதலிப்பேன்
என் ஆன்மா உள்ளவரை

தாடி காதலின் தத்துவம்
கூறும்
அமைதி அதன்
அர்த்தங்கள் பேசும்
கற்பு அதன் கண்ணியம் காட்டும்
சாதி அதை சாக்கடையாக்கும்.

# நிறைமகள்

-வேதமூர்த்தி-

அரங்கேற்றம்

காவரிப் பூம் பட்டினம் கண்ட
கணிகையர் குல நங்கை
மாதவி மங்கை
இவன்
''மானின் விழி கண்டு
மாய வலை கொண்ட
தேகம் தனைக் கொண்டதோ? உடல்
ஆவி அலை பாய
ஆண்கள் நிலை சாய
மோச விடங்கொண்ட
மோனத் திருக்கோலமோ?
கொங்கை மலையாக
கங்கை நதியான
தங்க மயில் இவளோ?– கூந்தல்
வங்கக் கடல் உண்ட
வண்ணக் கரு மேகமோ?
பெண்கள் கண்கூட
பேதை எழில் காணப் பெரிதாகுமே
உடல் சிறிதாகுமே.
என
வளர்ந்த வளமான
நங்கை நடம் காண
காவரிப்பூம்பட்டிணம் களைகட்டியது.

**நிறைவாள்...**

# வாசகரிடமிருந்து கவிஞனுக்கு

*கவிஞனே...! நீ வாழி...!*

கவிஞனே...! உன்னை என் கலைப் பொக்கிசம் என்றே போற்றுகின்றேன்.
புவியினிலே எழுந்து "எவரஸ்ட்" சிபரமென உயர்ந்து
காவிரிபோல் பரந்து கவிஞர் நெஞ்சங்களில் நீ தவழ்ந்து
பாரதிபோல் புகழ் ஓங்கி பாரினிலே நிலைத்து நின்று
"எம்மதமும் சம்மதமே" எடுத்தியம்பி எழுந்து நின்று
நல்லிசை யாழ்மீபாடும் தேன்நாட்டிலிருந்து வந்து
எண்ணற்ற விடயங்களை எங்கள் எண்ணத்திலே திணித்து வைத்து
பள்ளத்தில் வ்ழ்ந்திருக்கும் குருடர்கள் விழித்திட ஊக்கம் தந்து
பல் கவிஞர் நெந்நாக் கவிதைமழை ஆக்கங்கள் நீ சுமந்து
தெள்ளுற்ற தமிழமுதின் சுவையூற்றாய் திங்கள் எமை நாடிவந்து
அறிவுக்கண்ணைத் திறந்து அவனி உயர் கவிஞரைக் காணவைத்து
தெழிவுநிறை சிந்தை கொண்டு தேசமெலாம் நிறைந்து நிற்கும் உன்னை
என்ன .சைபாடி எடுத்து வைப்பேன் என் ஏக்கங்களை..
மெல்லமுடியாமல் தொடுத்து வைப்பேன் என் ஆக்கங்களை..
கன்னல் தமிழினிலே கவிஞனே! உன்னைக் கவின் ஒனிபெற ஏற்றிப்பாட
பொன்னும் மணியும் இழை "பொன்னாடை" போர்த்திப்பாட
பெண்ணோடு ஆடும் அந்தப் பரமசிவன் தாழ்பணிந்து
பண்ணோடு இசைபாடி பாமாலைகள் நான் சூட்டி
எந்நாளும்"நீடூழி நீவாழ" நான் பாட
மண்வாழும் காலமெலாம் "வாழ்க கவிஞன்"

என வாழ்த்திடும்

**புற்றூர் பரமேஸ்வரி.**

---

## கவிதை நூல் அறிமுகம்




**நூல்** : ஏ.இக்பால் கவிதைகள் 100
**ஆசிரியர்** : ஏ.இக்பால்
**முகவரி** : "றிபாயா மன்ஸில்" தர்கா நகர்
**வெளியீட்டு அனுசரணை** :
தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபை
**முதற் பதிப்பு** : 2009
**விலை** : ரு.280.00

அன்புடையீர்.

வணக்கம்.

ஈழத்து மறைந்த எழுத்தாளர்கள் பற்றிய கட்டுரைகளைத் தாங்கி 'இலக்கியப்பூக்கள்' நூல் (375பக்கங்கள்) வெளிவந்துள்ளது. தொடர்ந்து இரண்டாம் பகுதி தயாராகிறது. எனவே தங்களுக்குத் தெரிந்த எழுத்தாளர்கள் பற்றிய தகவல்களைத் தாங்கிய கட்டுரைகளை (4/5பக்கங்கள், புகைப்படம்) எழுதி அனுப்புங்கள். கூடவே, தங்களைப் பற்றிய தகவல்களையும், புகைப்படத்தையும் இணைத்து அனுப்புங்கள். 'இலக்கியப்பூக்கள் –1' நூலை புத்தகக் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம். நண்பர்களுக்கும் இத் தகவலைப் பரிமாறுவதன் மூலம் பகுதி 2 சிறப்பாக வர ஒத்துழைப்பு தரமுடியும்.

நன்றி,

**தொடர்புகளுக்கு :**

mullai amuthan
34, Red Riffe Road,
Plaistow,
E13 0JX

---

நகரும் நாட்களின் தொடரும் விடிவிற்காய் உங்கள் மனப்பதிவுகளை கவிஞன் எனும் காலக்கண்ணாடியில் தரவேற்றம் செய்து, உங்கள் ஆக்கங்களையும் காலத்தின் தேவையையும் கலையினூடு பகிர்ந்து கொள்ளுங்கள்

உங்கள் ஆக்கங்களை கீழுள்ள முகவரிக்கு அனுப்பி காலக்கண்ணாடியின் கோலப்புத்தகத்தில் நீங்களும் புள்ளி வையுங்கள்!!!

**அனைத்துத் தொடர்புகளுக்கும்:**

தபால் முகவரி **"கவிஞன்"**
**கூட்டுறவுக் கடை வீதி.**
**புதுக்குடியிருப்பு - 5 (கீ.மா).**
**மட்டக்களப்பு.**
**இலங்கை.**

மின்னஞ்சல் kavignan@live.com

தொலைபேசி இல 0773620328

அனைத்து ஆக்கங்களுக்கும் படைப்பாளிகளே பொறுப்புடையவர்